# தமிழ் – வகுப்பு 10 – மதிப்பீடு

## இயல் – 1

| 1 | 'இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே!' – இவ்வடியில் பத்தும் எட்டும் குறிப்பவை |
|---|---|
| *** 1 | சங்க இலக்கியங்கள் |
| 2 | அற இலக்கியங்கள் |
| 3 | காப்பியங்கள் |
| 4 | சிற்றிலக்கியங்கள் |

| 2 | பொருத்துக. |
|---|---|
| 1 | பாவலரேறு – அ) தமிழழகனார் |
| 2 | பன்மொழிப் புலவர் – ஆ) தேவநேயப் பாவாணர் |
| 3 | மொழிஞாயிறு – இ) க.அப்பாத்துரையார் |
| 4 | சந்தக்கவிமணி – ஈ) பெருஞ்சித்திரனார் |
| 1 | 1 – இ, 2 – ஆ, 3 – அ, 4 – ஈ |
| *** 2 | 1 – ஈ, 2 – இ, 3 – ஆ, 4 – அ |
| 3 | 1 – இ, 2 – ஈ, 3 – ஆ, 4 – அ |
| 4 | 1 – அ, 2 – ஆ, 3 – ஈ, 4 – இ |

| 3 | பொருத்துக. |
|---|---|
| 1 | மா – அ) நாற்று |
| 2 | தென்னை – ஆ) கன்று |
| 3 | பனை – இ) பிள்ளை |
| 4 | கத்தரி – ஈ) வடலி |
| 1 | 1 – ஈ, 2 – அ, 3 – ஆ, 4 – இ |
| 2 | 1 – அ, 2 – ஆ, 3 – இ, 4 – ஈ |
| 3 | 1 – இ, 2 – ஆ, 3 – அ, 4 – ஈ |
| *** 4 | 1 – ஆ, 2 – இ, 3 – ஈ, 4 – அ |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 4 | "நித்தம் அணைகிடந்தே<br>சங்கத்தவர் காக்க"<br>இவ்வடிகளை ஒத்திருக்கும் கடலின் செயல் | |
| | 1 | கடலில் தோன்றும் சங்குகளைக் கரைகாணாதவாறு அணைத்தல். |
| *** | 2 | நீரலையைத் தடுத்து நிறுத்திச் சங்கினைக் காத்தல். |
| | 3 | மூவகைச் சங்கினைத்தரும் கடலைக் காத்தல். |
| | 4 | கடல் தன் அலைகளால் சங்கினை வெளியே தள்ளுதல். |

| | | |
|---|---|---|
| 5 | சார்பெழுத்துகள் என்பவை | |
| | 1 | ஒன்றிற்கும் மேற்பட்ட எழுத்துகளைச் சார்ந்து வருபவை. |
| | 2 | மூவகை அளபெடைகளை மட்டும் சார்ந்து வருபவை. |
| *** | 3 | முதலெழுத்துகளைச் சார்ந்து வருபவை |
| | 4 | ஒரு மொழியைச் சார்ந்து வருபவை |

| | | |
|---|---|---|
| 6 | பொருத்துக | |
| | 1 | சொல்லிசை அளபெடை – அ) இயற்றியவர் |
| | 2 | பொதுமொழி – ஆ) ஓஒதல் வேண்டும் |
| | 3 | வினையாலணையும் பெயர் – இ) உரனசைஇ |
| | 4 | செய்யுளிசை அளபெடை – ஈ) வேங்கை |
| | 1 | 1 – ஈ, 2 – இ, 3 – அ, 4 – ஆ |
| *** | 2 | 1 – இ, 2 – ஈ, 3 – அ, 4 – ஆ |
| | 3 | 1 – ஈ, 2 – அ, 3 – ஆ, 4 – இ |
| | 4 | 1 – அ, 2 – ஈ, 3 – இ, 4 – ஆ |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 7 | பொருத்துக. | |
| | 1 | வினைமுற்று ... அ) பேறு |
| | 2 | தொழிற்பெயர் ... ஆ) கட்டு |
| | 3 | முதனிலை தொழிற்பெயர் ... இ) எய்தல் |
| | 4 | வினையடி ... ஈ) எய்தும் |
| *** | 1 | 1 ... ஈ, 2 ... இ, 3 ... ஆ, 4 ... அ |
| | 2 | 1 ... இ, 2 ... அ, 3 ... ஈ, 4 ... ஆ |
| | 3 | 1 ... ஈ, 2 ... இ, 3 ... அ, 4 ... ஆ |
| | 4 | 1 ... அ, 2 ... இ, 3 ... ஆ, 4 ... ஈ |

| | | |
|---|---|---|
| 8 | சொல் என்பது | |
| | 1 | ஓர் எழுத்து தனித்து உச்சரிக்கப்படுவது |
| | 2 | பல எழுத்துகள் சேர்ந்து பொருள் தருவது |
| | 3 | இரண்டு எழுத்துகள் சேர்ந்து பொருள் தருவது |
| *** | 4 | ஓர் எழுத்து தனித்தோ பல எழுத்துகளோடு சேர்ந்தோ பொருளைத் தருவது |

| | | |
|---|---|---|
| 9 | பொதுமொழி என்பது | |
| | 1 | ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளில் வருவது |
| | 2 | குறிப்பிட்ட ஒரு இனத்தவருக்கான பொதுவான மொழி |
| *** | 3 | ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து பொதுவாய் அமைவது |
| | 4 | மக்களால் பொதுவாகப் பேசப்படும் மொழி |

| | | |
|---|---|---|
| 10 | வெஃஃகுவார்க்கில்லை, எடுப்பதூஉம் .. இச்சொற்களில் உள்ள அளபெடைகள் | |
| | 1 | ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை |
| | 2 | இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை |
| | 3 | சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை |
| *** | 4 | ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 11 | இலையுதிர்காலம் . . . . . . . . . . . . சருகாயின !<br>மழைக்காலம் . . . . . . . . . . . . தழைத்தன !<br>சருகுகளோ செழுமையான உரங்களாயின !<br>.. புதுக்கவிதைக்குப் பொருத்தமான எதுகை, மோனைச் சொற்களை இட்டு நிரப்புக | |
| | 1 | மரங்களெல்லாம், கிளைபரப்பின |
| | 2 | காடெல்லாம், வளர்ந்தன |
| *** | 3 | இலைகளெல்லாம், மரங்களெல்லாம் |
| | 4 | மலையெல்லாம், முளைத்தன |

| | | |
|---|---|---|
| 12 | ஆலும் வேலும் பல்லுக்குறுதி,<br>நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.<br>.. இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும், தமிழெண்களையும் குறிப்பிடுக. | |
| | 1 | ஆலமரம், வேப்பமரம், ரு, க |
| *** | 2 | ஆலமரம், வேலமரம், ச, உ |
| | 3 | அரசமரம், வேங்கைமரம், க, உ |
| | 4 | வேப்பமரம், ஆலமரம், ச, கூ |

www.Padasalai.Net

## தமிழ் – வகுப்பு 10 – மதிப்பீடு
## இயல் – 2

| | | |
|---|---|---|
| 1 | பொருத்துக. | |
| | 1 | ஐயூர் முடவனார் – அ) செந்தமிழின் பின்னுதித்த தென்றலே |
| | 2 | ஔவையார் – ஆ) வண்டொடு புக்க மணவாய்த் தென்றல் |
| | 3 | இளங்கோவடிகள் – இ) வாயுவழக்கம் ஆயுள் அறிந்து செறித்தடங்கில் |
| | 4 | பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் – ஈ) வளி மிகின் வலி இல்லை |
| | 1 | 1 – ஈ, 2 – அ, 3 – ஆ, 4 – இ |
| | 2 | 1 – ஆ, 2 – இ, 3 – அ, 4 – ஈ |
| *** | 3 | 1 – ஈ, 2 – இ, 3 – ஆ, 4 – அ |
| | 4 | 1 – இ, 2 – ஈ, 3 – ஆ, 4 – அ |

| | | |
|---|---|---|
| 2 | ‘குணக்கு’ என்னும் சொல்குறிக்கும் பொருள் | |
| *** | 1 | கிழக்கு |
| | 2 | குடக்கு |
| | 3 | குளிர்ச்சி |
| | 4 | தென்றல் |

| | | |
|---|---|---|
| 3 | ‘நறுவீ’ - என்னும் சொல்லின் பொருள் | |
| | 1 | நல்ல மலர்கள் |
| | 2 | நன்கு விரிந்த மலர்கள் |
| | 3 | மகரந்தம் தூவும் மலர்கள் |
| *** | 4 | நறுமணமுடைய மலர்கள் |

| | | |
|---|---|---|
| **4** | காற்றை பாரதியார் 'மயலுறுத்து' அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர் | |
| | 1 | மணம் வீசும் காற்றாய் நீ வா |
| *** | 2 | மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா |
| | 3 | மயிலாடும் காற்றாய் நீ வா |
| | 4 | மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா |

| | | |
|---|---|---|
| **5** | பாரதியார் பணியாற்றிய இதழ்கள் | |
| | 1 | இந்தியா, குயில் |
| | 2 | புதுவை முரசு, இந்தியா |
| *** | 3 | சுதேசமித்ரன், இந்தியா |
| | 4 | குடியரசு, புதுவை முரசு |

| | | |
|---|---|---|
| **6** | தடக்கை - இலக்கணக் குறிப்பு | |
| | 1 | வினையாலணையும் பெயர் |
| | 2 | பண்புத்தொகை |
| *** | 3 | உரிச்சொற்றொடர் |
| | 4 | உம்மைத்தொகை |

| | | |
|---|---|---|
| **7** | தைத்திங்கள் என்பது | |
| | 1 | அன்மொழித்தொகை |
| | 2 | உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| | 3 | உம்மைத் தொகை |
| *** | 4 | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 8 | அண்ணன் தம்பி வந்தனர் - இத்தொடரில் உள்ள தொகைச் சொல்லின் விரி | |
| | 1 | அண்ணனுக்குத் தம்பி |
| *** | 2 | அண்ணனும் தம்பியும் |
| | 3 | அண்ணனால் தம்பி |
| | 4 | அண்ணனுடன் தம்பி |

| | | |
|---|---|---|
| 9 | இயற்கை நிகழ்வுகளோடு ஒப்பிடத் தகுந்தனவற்றைப் பொருத்துக | |
| | 1 | துளிர்க்கும் நாற்றுகள் - அ) அச்சம் |
| | 2 | இளந்தென்றல் - ஆ) குழந்தைகள் முகம் |
| | 3 | சுழன்றடிக்கும் புயல் - இ) நம்பிக்கை |
| | 4 | மலர்ந்த மலர்கள் - ஈ) இன்ப உணர்வு |
| *** | 1 | 1 - இ, 2 - ஈ, 3 - அ, 4 - ஆ |
| | 2 | 1 - ஈ, 2 - இ, 3 - ஆ, 4 - அ |
| | 3 | 1 - அ, 2 - ஆ, 3 - ஈ, 4 - இ |
| | 4 | 1 - இ, 2 - அ, 3 - ஈ, 4 - ஆ |

| | | |
|---|---|---|
| 10 | "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்"<br>இப்பழமொழி உணர்த்தும் பொருள் | |
| | 1 | காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும் |
| *** | 2 | உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும் |
| | 3 | உரிய காலத்தில் செயலுக்கான முயற்சியை மேற்கொள்ளவேண்டும் |
| | 4 | உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேடவேண்டும் |

www.Padasalai.Net

# தமிழ் – வகுப்பு 10 – மதிப்பீடு
## இயல் – 3

| | | |
|---|---|---|
| 1 | ‘காலின் ஏழடிப் பின் சென்று’ என்று பொருநராற்றுப்படை குறிப்பிடுவது | |
| | 1 | விருந்தினர் கால்தொட்டு வணங்கி வரவேற்றல் |
| | 2 | விருந்தினரைப் பேணுதல் பொருட்டு ஏழு அடி நடந்து சென்று வரவேற்றல் |
| *** | 3 | விருந்தினரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்புதல் |
| | 4 | அடியார்களை வணங்கி வரவேற்றல் |

| | | |
|---|---|---|
| 2 | தமிழரின் விருந்தோம்பலில் அடிப்படைப் பண்பு | |
| | 1 | ஈதற்கடன் |
| *** | 2 | பகிர்ந்துண்ணல் |
| | 3 | விருந்து படைத்தல் |
| | 4 | மகிழ்ந்துண்ணல் |

| | | |
|---|---|---|
| 3 | பொருத்துக. | |
| | 1 | “மருந்தே ஆயினும் விருந்தொடு உண்” – அ) திருக்குறள் |
| | 2 | மோப்பக்குழையும் அனிச்சம் . . . . . . – ஆ) புறநானூறு |
| | 3 | “அமிழ்தம் இயைவதாயினும் இனிதுஎனத் தமியர் உண்டலும் இலரே” – இ) நற்றிணை |
| | 4 | “அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்” – ஈ) கொன்றைவேந்தன் |
| | 1 | 1 – அ, 2 – ஆ, 3 – ஈ, 4 – இ |
| | 2 | 1 – இ, 2 – ஈ, 3 – ஆ, 4 – அ |
| | 3 | 1 – ஆ, 2 – அ, 3 – இ, 4 – ஈ |
| *** | 4 | 1 – ஈ, 2 – அ, 3 – ஆ, 4 – இ |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 4 | பின்வருவனவற்றுள் சங்க இலக்கியம் அல்லாதது | |
| | 1 | இனிதெனத் தமியர் உண்டலும் இலரே |
| | 2 | குதல் உணங்கு விதைத் தினை உரல் வாய்ப்பெய்து |
| | 3 | கருங்கோட்டுச் சீறியாழ் பணையமிது கொண்டு ஈவதிலாளன் |
| *** | 4 | பசி வரப் பத்தும் பறந்து போகும். |

| | | |
|---|---|---|
| 5 | பொருத்துக | |
| | 1 | பெருங்கௌசிகனார் ... அ) நைடதம் |
| | 2 | கி.ராஜநாராயணன் ... ஆ) காசிக்காண்டம் |
| | 3 | விருந்தோம்பும் நெறி ... இ) கூத்தராற்றுப்படை |
| | 4 | காசியின் சிறப்பு ... ஈ) கரிசல் இலக்கியம் |
| *** | 1 | 1 ... இ, 2 ... அ, 3 ... ஈ, 4 ... ஆ |
| | 2 | 1 ... அ, 2 ... ஆ, 3 ... ஈ, 4 ... இ |
| | 3 | 1 ... இ, 2 ... ஈ, 3 ... அ, 4 ... ஆ |
| | 4 | 1 ... ஆ, 2 ... இ, 3 ... ஆ, 4 ... ஈ |

| | | |
|---|---|---|
| 6 | கூற்று .. மலைப்படுகடாம் என்பது ஆற்றுப்படை நூல்களில் ஒன்று<br>காரணம் .. புகழ்ந்துப் பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரை வழிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. | |
| | 1 | கூற்று மட்டும் சரி |
| *** | 2 | கூற்று, காரணம் இரண்டும் சரி |
| | 3 | காரணம் மட்டும் சரி |
| | 4 | கூற்று காரணம் இரண்டிற்கும் தொடர்பில்லை |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 7 | பொருத்துக | |
| | 1 | தேடித்தேடி ... அ) வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் |
| | 2 | தெரிந்த பெயர் ... ஆ) வினைமுற்றுத் தொடர் |
| | 3 | வளர்ந்தது தமிழ் ... இ) பெயரெச்சத் தொடர் |
| | 4 | ஊரின்கண் நீங்கினர் ... ஈ) அடுக்குத் தொடர் |
| *** | 1 | 1 ... ஈ, 2 ... இ, 3 ... ஆ, 4 ... அ |
| | 2 | 1 ... இ, 2 ... ஈ, 3 ... அ, 4 ... ஆ |
| | 3 | 1 ... ஆ, 2 ... இ, 3 ... ஈ, 4 ... அ |
| | 4 | 1 ... ஈ, 2 ... ஆ, 3 ... அ, 4 ... இ |

| | | |
|---|---|---|
| 8 | பொருத்துக | |
| | 1 | குறள் ... அ) போற்றி |
| | 2 | ஊழ் ... ஆ) செல்வம் |
| | 3 | திரு ... இ) இரண்டடி வெண்பா |
| | 4 | பேணி ... ஈ) முன்வினை |
| | 1 | 1 ... ஈ, 2 ... இ, 3 ... ஆ, 4 ... அ |
| *** | 2 | 1 ... இ, 2 ... ஈ, 3 ... ஆ, 4 ... அ |
| | 3 | 1 ... அ, 2 ... ஈ, 3 ... இ, 4 ... ஆ |
| | 4 | 1 ... ஈ, 2 ... இ, 3 ... அ, 4 ... ஆ |

| | | |
|---|---|---|
| 9 | கண்ணோட்டம் என்னும் சொல்லின் பொருள் | |
| | 1 | கவனித்தல் |
| | 2 | உற்றுநோக்கல் |
| *** | 3 | இரக்கம் |
| | 4 | விடாமுயற்சி |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 10 | "நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்<br>நச்சு மரம்பழுத் தற்று"<br>… இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி | |
| | 1 | எடுத்துக்காட்டு உவமையணி |
| | 2 | சொல்பின்வரு நிலையணி |
| | 3 | வஞ்சப்புகழ்ச்சி அணி |
| *** | 4 | உவமையணி |

| | | |
|---|---|---|
| 11 | பழமொழிகளைப் பொருத்துக | |
| | 1 | ஆறில்லா ஊருக்கு … அ) அடி சறுக்கும் |
| | 2 | காலிப்பை … ஆ) நூறு வயது |
| | 3 | நொறுங்கத் தின்றால் … இ) நிமிர்ந்து நிற்பதில்லை |
| | 4 | யானைக்கும் … ஈ) அழகு பாழ் |
| | 1 | 1 … இ, 2 … அ, 3 … ஆ, 4 … ஈ |
| | 2 | 1 … ஆ, 2 … ஈ, 3 … அ, 4 … இ |
| | 3 | 1 … இ, 2 … ஈ, 3 … ஆ, 4 … அ |
| *** | 4 | 1 … ஈ, 2 … இ, 3 … ஆ, 4 … அ |

| | | |
|---|---|---|
| 12 | விடுபட்ட உணவு வகைகளை வரிசைப்படுத்துக.<br>பச்சரிசியைக் கொண்டு ........ செய்து பாசிப்பருப்பினை வறுத்து ........ பிடித்து<br>கேரட்டைத் துருவி நெய்யிட்டு ....... செய்து முடித்த அம்மா, இறுதியாக<br>உருளைக்கிழங்கைச் சீவி ......... செய்து அனைவரையும் உணவு உண்ண அழைத்தார் | |
| | 1 | பொங்கல், உருண்டை, சீவல், அல்வா |
| | 2 | சீவல், உருண்டை, பொங்கல், அல்வா |
| *** | 3 | பொங்கல், உருண்டை, அல்வா, சீவல் |
| | 4 | உருண்டை, சீவல், அல்வா, பொங்கல் |

# தமிழ் ... வகுப்பு 10 – மதிப்பீடு
## இயல் ... 4

| | | |
|---|---|---|
| 1 | பெப்பர் என்பது | |
| | 1 | மொழிநடையை உருவாக்கும் மென்பொருள் |
| | 2 | உரையாடு மென்பொருள் |
| | 3 | செயற்கை நுண்ணறிவுக் கணினி |
| *** | 4 | ஜப்பானிய வங்கியின் இயந்திர மனிதன் |

| | | |
|---|---|---|
| 2 | திராவிட வேதம் | |
| | 1 | பெரிய புராணம் |
| *** | 2 | பெரிய திருமொழி |
| | 3 | நாலாயிரந் திவ்வியப் பிரபந்தம் |
| | 4 | முகுந்த மலை |

| | | |
|---|---|---|
| 3 | மீளாத் துயர் | |
| | 1 | வினையாலணையும் பெயர் |
| *** | 2 | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| | 3 | வினையெச்சம் |
| | 4 | பெயரெச்சத் தொடர் |

| | | |
|---|---|---|
| 4 | தண்பெயல் என்பது | |
| | 1 | நிறை வெள்ளம் |
| | 2 | வெள்ளக் காடு |
| *** | 3 | குளிர்ந்த மழை |
| | 4 | பெருமழை |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 5 | ஒலிம்பிக்கில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர் நாளை இந்தியா வருகிறார்! என்பது | |
| | 1 | பால் வழுவமைதி |
| | 2 | இட வழுவமைதி |
| *** | 3 | கால வழுவமைதி |
| | 4 | மரபு வழுவமைதி |

| | | |
|---|---|---|
| 6 | திணைவழுமைதி | |
| | 1 | ‘இந்த பாப்பா தூங்கமாட்டாள்’ என்று தன்னையே குழந்தை குறிப்பிடுவது |
| | 2 | இரவெல்லாம் நாய் கத்திக்கொண்டே இருந்தது |
| | 3 | வாடா செல்லம் என்று தாய் மகளை அழைப்பது |
| *** | 4 | ‘என் தங்கை வந்தாள்’ என்று பசுவைக் குறிப்பிடுவது |

| | | |
|---|---|---|
| 7 | பொருத்துக | |
| | 1 | பறவைகள், குன்றுகள் ... அ) முன்னிலைப் பெயர்கள் |
| | 2 | பெண்கள், குழந்தைகள் ... ஆ) அஃறிணைப் பலவின்பால் |
| | 3 | படித்தனர், பறந்தன ... இ) படர்க்கை வினைகள் |
| | 4 | நீங்கள், நீவிர் ... ஈ) உயர்திணைப் பலர்பால் |
| | 1 | 1 ... ஆ, 2 ... இ, 3 ... அ, 4 ... ஈ |
| | 2 | 1 ... ஈ, 2 ... இ, 3 ... அ, 4 ... ஆ |
| *** | 3 | 1 ... ஆ, 2 ... ஈ, 3 ... இ, 4 ... அ |
| | 4 | 1 ... இ, 2 ... ஈ, 3 ... அ, 4 ... அ |

| | | |
|---|---|---|
| 8 | கொடுக்கப்பட்ட சொற்கள் அமைந்த பொருத்தமான தொடரைத் தெரிக<br>(ஏரி, ஆறு, மலை, மழை, மேகம், குளம்) | |
| | 1 | மலைமீது மழைபெய்து ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது |
| *** | 2 | கருத்த மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின |
| | 3 | திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன |
| | 4 | மலைமீது மழைபெய்ய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது |

| | | |
|---|---|---|
| 9 | வெட்டிய மரங்களுக்கு ஈடாக . . . . . . . . . நட்டனர். | |
| | 1 | கொடிகளை |
| | 2 | நாற்றுகளை |
| | 3 | மரங்களை |
| *** | 4 | மரக்கன்றுகளை |

| | | |
|---|---|---|
| 10 | செயற்கை நுண்ணறிவு ஒரு | |
| *** | 1 | மென்பொருள் |
| | 2 | இயந்திரம் |
| | 3 | கணக்கிடும் கருவி |
| | 4 | மின்னனுக் கருவி |

www.Padasalai.Net

# தமிழ் ... வகுப்பு 10 – மதிப்பீடு
## இயல் ... 5

| | | |
|---|---|---|
| 1 | 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்னும் நூலின் ஆசிரியர் | |
| | 1 | கணமுத்தையா |
| | 2 | வைரமுத்து |
| *** | 3 | ராகுல் சாங்கிருத்யாயன் |
| | 4 | யூமா வாசுகி |

| | | |
|---|---|---|
| 2 | திருத்தக்கத்தேவரும் வில்லிபுத்தூராரும் வடமொழி மூலங்களைத் தழுவி எழுதிய நூல்கள் | |
| | 1 | மகாபாரதமும் இராமாயணமும் |
| | 2 | திருவிளையாடற் புராணமும் சீவக சிந்தாமணியும் |
| *** | 3 | சீவக சிந்தாமணியும் மகாபாரதமும் |
| | 4 | சீவக சிந்தாமணியும் இராமாயணமும் |

| | | |
|---|---|---|
| 3 | பொருத்துக. | |
| | 1 | அருள் ... அ) மயக்கம் |
| | 2 | மருள் ... ஆ) தெளிவு |
| | 3 | தெருள் ... இ) நூறு |
| | 4 | சதம் ... ஈ) கருணை |
| | 1 | 1 ... இ, 2 ... அ, 3 ... ஈ, 4 ... ஆ |
| | 2 | 1 ... ஆ, 2 ... ஈ, 3 ... அ, 4 ... இ |
| *** | 3 | 1 ... ஈ, 2 ... அ, 3 ... ஆ, 4 ... இ |
| | 4 | 1 ... இ, 2 ... ஆ, 3 ... ஈ, 4 ... அ |

| | | |
|---|---|---|
| 4 | நூறு செயல்களை ஒரேநேரத்தில் செய்து காட்டியவர் | |
| | 1 | பரஞ்சோதி முனிவர் |
| | 2 | இரவீந்திரநாத் தாகூர் |
| *** | 3 | செய்குதம்பிப் பாவலர் |
| | 4 | பாரதியார் |

| | | |
|---|---|---|
| 5 | பரஞ்சோதி முனிவரால் இயற்றப்படாத நூல் | |
| *** | 1 | கந்தர் கலிவெண்பா |
| | 2 | வேதாரண்யப் புராணம் |
| | 3 | திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா |
| | 4 | திருவிளையாடற் புராணம் |

| | | |
|---|---|---|
| 6 | பெருக்கி, திருத்தி, அகற்றி - என்பன | |
| | 1 | பெயரெச்சங்கள் |
| *** | 2 | வினையெச்சங்கள் |
| | 3 | உம்மைத்தொகைகள் |
| | 4 | வினையெச்சங்கள் |

| | | |
|---|---|---|
| 7 | 'கண் உலர்ந்து எரிச்சல் அடையும்' என்ற உறுவது கூறல் விடைக்கேற்ற வினா | |
| | 1 | உனக்குக் கதை எழுதத் தெரியுமா? |
| | 2 | உறக்கம் வரவில்லையா? |
| | 3 | பாடலைப் பாடிக் காட்டுகிறாயா? |
| *** | 4 | இக்கட்டுரையை ஐந்து வகுப்புகளுக்குப் படித்துக் காட்டுகிறாயா? |

| | | |
|---|---|---|
| 8 | ‘ஒரு கவிதை எழுதித் தருகிறாயா? என்ற கேள்விக்கான மறைவிடை | |
| *** | 1 | எழுதித் தரமாட்டேன் |
| | 2 | நாளை எழுதுகிறேன் |
| | 3 | எழுதும் மனநிலை இல்லை |
| | 4 | நீயே எழுதிக்கொள் |

| | | |
|---|---|---|
| 9 | புதிருக்கான விடையை வரிசைப்படி தேர்ந்தெடுக்க<br>தவழும்போது ஒரு பெயர்<br>விழும்போது ஒரு பெயர்<br>உருளும்போது ஒரு பெயர்<br>திரண்டோடும்போது ஒரு பெயர் ... அவை என்ன? | |
| | 1 | நீர், மழை, ஆறு, ஓடை |
| *** | 2 | மேகம், மழை, நீர், வெள்ளம் |
| | 3 | மாரி, கார், நீர், புனல் |
| | 4 | மழை, புனல், மேகம், நீர் |

| | | |
|---|---|---|
| 10 | Mosquito - bite ………..<br>Disturbing the mother<br>tiny anklet --- இந்த ஆங்கிலத் கவிதைக்கான பொருத்தமான தமிழாக்கம் | |
| | 1 | கொசுடிக்கு தாயே காவல் காப்பார் குழந்தையின் கொலுசொலியோடு |
| | 2 | கொசுக்கடியில் உறங்கா தாய், எழுப்பும் குழந்தையின் கொலுசொலியும் |
| *** | 3 | கடிக்கும் கொசு, தாயை எழுப்பும் சின்னக் கொலுசு |
| | 4 | கொசுக்களின் தொல்லை, உறங்கா அன்னையும் குழந்தையும் உறங்கா இரவும் |

| 11 | பொருத்துக | |
|---|---|---|
| | 1 | உதவும் பொருட்டு வினவுவது ... அ) மறை விடை |
| | 2 | பொருளை வாங்குதல் ... ஆ) நேர் விடை |
| | 3 | வெளிப்படை ... இ) கொளல் வினா |
| | 4 | மறுத்துக் கூறுதல் ... ஈ) கொடை வினா |
| | 1 | 1 ... ஈ, 2 ... அ, 3 ... இ, 4 ... ஆ |
| | 2 | 1 ... இ, 2 ... ஆ, 3 ... அ, 4 ... ஈ |
| *** | 3 | 1 ... ஈ, 2 ... இ, 3 ... ஆ, 4 ... அ |
| | 4 | 1 ... அ, 2 ... ஈ, 3 ... ஆ, 4 ... இ |

| 12 | இனமொழி விடை | |
|---|---|---|
| *** | 1 | ஆடுவாயா? என்ற வினாவிற்கு பாடுவேன் என்று கூறுவது |
| | 2 | ஆடுவாயா? என்ற வினாவிற்கு கால் வலிக்கும் என்று கூறுவது |
| | 3 | ஆடுவாயா? என்ற வினாவிற்கு மாட்டேன் என்று கூறுவது |
| | 4 | ஆடுவாயா? என்ற வினாவிற்கு நீயே ஆடு என்று கூறுவது |

www.Padasalai.Net

www.Padasalai.Net

www.Padasalai.Net

www.Padasalai.Net

# தமிழ் – வகுப்பு 10 – மதிப்பீடு
## இயல் – 6

| | | |
|---|---|---|
| 1 | பொருத்துக. | |
| | 1 | பொய்க்கால் குதிரையாட்டம் – அ) கரகாட்டம் |
| | 2 | தப்பாட்டம் – ஆ) உறுமி |
| | 3 | கும்பாட்டம் – இ) புரவியாட்டம் |
| | 4 | தேவராட்டம் – ஈ) தோற்கருவி |
| | 1 | 1 – ஈ, 2 – ஆ, 3 – அ, 4 – இ |
| *** | 2 | 1 – இ, 2 – ஈ, 3 – அ, 4 – ஆ |
| | 3 | 1 – ஈ, 2 – இ, 3 – ஆ, 4 – அ |
| | 4 | 1 – ஆ, 2 – ஈ, 3 – அ, 4 – இ |

| | | |
|---|---|---|
| 2 | கரகாட்டத்திலும், தெருக்கூத்திலும் நிகழ்த்தப்படும் கதைகள் . . . . . | |
| *** | 1 | சிலப்பதிகாரமும் மகாபாரதமும் |
| | 2 | இராமாயணமும் சிலப்பதிகாரமும் |
| | 3 | மகாபாரதமும் மணிமேகலையும் |
| | 4 | சிலப்பதிகாரமும் மணிமேகலையும் |

| | | |
|---|---|---|
| 3 | பொருத்துக. | |
| | 1 | சுட்டி – அ) காதில் அணிவது |
| | 2 | குழை – ஆ) காலில் அணிவது |
| | 3 | பண்டி – இ) நெற்றியில் அணிவது |
| | 4 | கிண்கிணி – ஈ) வயிறு |
| | 1 | 1 – ஈ, 2 – அ, 3 – இ, 4 – ஆ |
| | 2 | 1 – அ, 2 – ஆ, 3 – ஈ, 4 – இ |
| | 3 | 1 – ஈ, 2 – இ, 3 – ஆ, 4 – அ |
| *** | 4 | 1 – இ, 2 – அ, 3 – ஈ, 4 – ஆ |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 4 | பொருத்துக. | |
| | 1 | வில் பிடித்த ... அ) நான்காம் வேற்றுமைத் தொகை |
| | 2 | நெடும்படை ... ஆ) வினைத்தொகை |
| | 3 | காலதூதன் ... இ) பண்புத்தொகை |
| | 4 | விரிசோதி ... ஈ) இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| *** | 1 | 1 ... ஈ, 2 ... இ, 3 ... அ, 4 ... ஆ |
| | 2 | 1 ... ஆ, 2 ... ஈ, 3 ... இ, 4 ... அ |
| | 3 | 1 ... இ, 2 ... அ, 3 ... ஆ, 4 ... ஈ |
| | 4 | 1 ... ஈ, 2 ... இ, 3 ... ஆ, 4 ... அ |

| | | |
|---|---|---|
| 5 | ஞாயிறு மறையும் நேரம் என்பது | |
| | 1 | யாமம் |
| | 2 | வைகறை |
| | 3 | மாலை |
| *** | 4 | எற்பாடு |

| | | |
|---|---|---|
| 6 | பொருத்துக | |
| | 1 | குறிஞ்சி ... அ) உப்புவிளைத்தல் |
| | 2 | முல்லை ... ஆ) நெல்லரிதல் |
| | 3 | மருதம் ... இ) நிரை மேய்த்தல் |
| | 4 | நெய்தல் ... ஈ) தேனெடுத்தல் |
| *** | 1 | 1 ... ஈ, 2 ... இ, 3 ... ஆ , 4 ... அ |
| | 2 | 1 ... இ, 2 ... ஆ, 3 ... ஈ, 4 ... அ |
| | 3 | 1 ... அ, 2 ... ஈ, 3 ... ஆ, 4 ... இ |
| | 4 | 1 ... ஆ, 2 ... அ, 3 ... இ, 4 ... ஈ |

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

| | | |
|---|---|---|
| 7 | வரகு, சாமை இவற்றை உணவாகக் கொண்ட நிலம் | |
| | 1 | மருதம் |
| | 2 | பாலை |
| | 3 | குறிஞ்சி |
| *** | 4 | முல்லை |

| | | |
|---|---|---|
| 8 | பொருத்துக | |
| | 1 | வன்கண் ... அ) உறவினர் |
| | 2 | இன்மை ... ஆ) பகைவர் |
| | 3 | செறுநர் ... இ) மனவலிமை |
| | 4 | சுற்றம் ... ஈ) வறுமை |
| *** | 1 | 1 ... இ, 2 ... ஈ, 3 ... ஆ , 4 ... அ |
| | 2 | 1 ... ஈ, 2 ... அ, 3 ... இ, 4 ... ஆ |
| | 3 | 1 ... ஆ, 2 ... ஈ, 3 ... அ, 4 ... ஈ |
| | 4 | 1 ... ஈ, 2 ... இ, 3 ... ஆ, 4 ... அ |

| | | |
|---|---|---|
| 9 | பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது | |
| | 1 | பொருளீட்டும் நெறியறிவே தொழில் புரிதல் |
| | 2 | தொழிலைச் செய்வதற்குரிய காலமறிந்து செய்தல் |
| *** | 3 | மதிக்கத் தகாதவரையும் மதிக்கச் செய்யும் பொருளை ஈட்டுதல் |
| | 4 | சிறந்த நூல்களைக் கற்றறிந்து புகழ் ஈட்டுதல் |

| | | |
|---|---|---|
| 10 | எர்லி மார்னிங் எழுந்து வாக்கிங் சென்று வந்து டீ குடித்த அம்மா நியூஸ் பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தார். ... இத்தொடரில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச்சொல் வரிசையை அறிக | |
| | 1 | வைகறை, நடைபயிற்சி, பத்திரிக்கை, தேநீர் |
| | 2 | அதிகாலை, நடந்து, தேநீர், பத்திரிக்கை |
| | 3 | காலை, நடை, தேநீர், செய்தி |
| *** | 4 | வைகறை, நடைபயிற்சி, தேநீர், செய்தித்தாள் |

www.Padasalai.Net

# தமிழ் – வகுப்பு 10 – மதிப்பீடு

## இயல் – 7

| | | |
|---|---|---|
| 1 | தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தமிழகத்தின் வடக்கெல்லை, தெற்கெல்லை | |
| | 1 | வேங்கடமலை, செங்கோட்டை |
| *** | 2 | வேங்கடமலை, குமரிமுனை |
| | 3 | சென்னை, கன்னியாகுமரி |
| | 4 | திருப்பதி, திருவிதாங்கூர் |

| | | |
|---|---|---|
| 2 | கூற்று – ம.பொ.சி எட்டாம் வகுப்புடன் பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டார்.<br>காரணம் – குடும்ப வறுமையின் காரணமாகப் பள்ளியிலிருந்து நின்றுவிட்டார். | |
| | 1 | கூற்று சரி, காரணம் தவறு |
| | 2 | கூற்று சரி, காரணம் சரி |
| *** | 3 | கூற்று தவறு, காரணம் சரி |
| | 4 | கூற்று தவறு, காரணம் தவறு |

| | | |
|---|---|---|
| 3 | பொருத்துக. | |
| | 1 | கொழு – அ) அகலிகை |
| | 2 | பதம் – ஆ) விரைந்து |
| | 3 | கு.ப.ரா. – இ) பக்குவம் |
| | 4 | கடுகி – ஈ) கம்பு |
| *** | 1 | 1 – ஈ, 2 – இ, 3 – அ, 4 – ஆ |
| | 2 | 1 – ஆ, 2 – அ, 3 – ஈ, 4 – இ |
| | 3 | 1 – இ, 2 – ஈ, 3 – ஆ, 4 – அ |
| | 4 | 1 – அ, 2 – இ, 3 – ஆ, 4 – ஈ |

| | | |
|---|---|---|
| 4 | மெய்க்கீர்த்தி என்பது | |
| | 1 | கல்வெட்டில் பொறிக்கப்பட்ட சிற்பங்கள் |
| | 2 | அழியாப்புகழ் பெற்ற நூல்கள் |
| *** | 3 | புலவர்களால் எழுதப்பட்டு கல் தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை |
| | 4 | மெய்யான புகழ், கொடை, வீரம் முதலியன குறித்த நூல்கள் |

| | | |
|---|---|---|
| 5 | “மருளுடையன இளமான்களே” இத்தொடர் உணர்த்தும் உட்கருத்து | |
| | 1 | மான்கள் மருள்கின்றன |
| | 2 | பெண்கள் மருள்கின்றனர் |
| *** | 3 | மக்கள் மருளவில்லை |
| | 4 | இளமான்கள் மருளவில்லை |

| | | |
|---|---|---|
| 6 | பொருத்துக | |
| | 1 | ஓசுநர் ... அ) நறுமணப்பொடி |
| | 2 | இசை ... ஆ) எண்ணெய் விற்போர் |
| | 3 | சுண்ணம் ... இ) செல்வம் |
| | 4 | வெறுக்கை ... ஈ) பாணர் |
| | 1 | 1 ... ஆ, 2 ... அ, 3 ... ஈ, 4 ... இ |
| | 2 | 1 ... அ, 2 ... ஈ, 3 ... இ, 4 ... ஆ |
| | 3 | 1 ... ஈ, 2 ... ஆ, 3 ... இ, 4 ... அ |
| *** | 4 | 1 ... ஆ, 2 ... ஈ, 3 ... அ, 4 ... இ |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 7 | 'மாட்டைப் பூட்டிக் காட்டைக் கீறுவோம்' – காடும் கீறலும் குறிப்பது | |
| | 1 | வனத்தையும் விலங்கையும் |
| | 2 | வயலையும் வனத்தையும் |
| *** | 3 | வயலையும் உழவையும் |
| | 4 | வனத்தையும் உழவையும் |

| | | |
|---|---|---|
| 8 | பொழுதேறப் பொன்பரவும் – 'பொன்பரவும்' என்னும் சொல்லின் பொருள் | |
| *** | 1 | கதிரவனின் ஒளி பரவும் |
| | 2 | நிலவின் ஒளி பரவும் |
| | 3 | நிலத்தில் பசுமை பரவும் |
| | 4 | நிலத்தில் விதை பரவும் |

| | | |
|---|---|---|
| 9 | பொருத்துக | |
| | 1 | கோட்டையைக் காத்தல் – அ) வஞ்சித் திணை |
| | 2 | வலிமையே பெரிது – ஆ) நொச்சித் திணை |
| | 3 | மண்ணாசை – இ) வெட்சித் திணை |
| | 4 | ஆநிரை கவர்தல் – ஈ) தும்பைத் திணை |
| | 1 | 1 – இ, 2 – ஆ, 3 – ஈ, 4 – அ |
| *** | 2 | 1 – ஆ, 2 – ஈ, 3 – அ, 4 – இ |
| | 3 | 1 – ஈ, 2 – அ, 3 – இ, 4 – ஆ |
| | 4 | 1 – ஆ, 2 – இ, 3 – அ, 4 – ஈ |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 10 | "சங்க இலக்கியங்கள், ஐந்திணைக்குமான ஒழுக்கங்களை இரு திணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன"<br>இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக. | |
| | 1 | குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை. நல்வினை, தீவினை |
| *** | 2 | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை. உயர்திணை, அஃறிணை |
| | 3 | குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம். அறம், பொருள் இன்பம் |
| | 4 | குறிஞ்சி, மலை, முல்லை, காடு, மருதம், வயல், நெய்தல், கடல். பனை, திணை |

www.Padasalai.Net

# தமிழ் ... வகுப்பு 10 – மதிப்பீடு
## இயல் ... 8

| | | |
|---|---|---|
| 1 | பொருத்துக. | |
| | 1 | திருமுடிக்காரி ... அ) பெருஞ்சித்திரனார் |
| | 2 | ஈகைப்புலவர் ... ஆ) கபிலர் |
| | 3 | உதவியாண்மை ... இ) ஆவூர் மூலங்கிழார் |
| | 4 | போர் அறம் ... ஈ) பூதன் தேவனார் |
| *** | 1 | 1 ... ஆ, 2 ... அ, 3 ... ஈ, 4 ... இ |
| | 2 | 1 ... அ, 2 ... ஈ, 3 ... இ, 4 ... ஆ |
| | 3 | 1 ... ஈ, 2 ... அ, 3 ... ஆ, 4 ... இ |
| | 4 | 1 ... ஆ, 2 ... இ, 3 ... அ, 4 ... ஈ |

| | | |
|---|---|---|
| 2 | நற்றிணை குறிப்பிடும் வாய்மை குறித்த தொடர் | |
| | 1 | வாய்மையே நல்லறம் |
| *** | 2 | பிழையா நன்மொழி |
| | 3 | வாய்மையே வெல்க |
| | 4 | உயிரினும் மேலானது மெய் |

| | | |
|---|---|---|
| 3 | பொருத்துக. | |
| | 1 | கந்தை ... அ) சன்னல் |
| | 2 | தூரிகை ... ஆ) பழைய |
| | 3 | சாளரம் ... இ) மண்துகள் |
| | 4 | புழுதி ... ஈ) தீட்டும் கருவி |
| | 1 | 1 ... இ, 2 ... ஆ, 3 ... அ, 4 ... ஈ |
| | 2 | 1 ... ஈ, 2 ... அ, 3 ... ஈ, 4 ... ஆ |
| | 3 | 1 ... ஆ, 2 ... இ, 3 ... ஈ, 4 ... அ |
| *** | 4 | 1 ... ஆ, 2 ... ஈ, 3 ... அ, 4 ... இ |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 4 | கவியரசு கண்ணதாசனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற படைப்பு | |
| | 1 | தைப்பாவை |
| | 2 | இயேசு காவியம் |
| | 3 | காலக் கணிதம் |
| *** | 4 | சேரமான் காதலி |

| | | |
|---|---|---|
| 5 | மாறாதிருப்பவை என கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுவன | |
| | 1 | மானிடர், காடுமேடு, உலகம் |
| | 2 | கல், மண், சாலை |
| *** | 3 | கல், மரம், காடுமேடு |
| | 4 | சாலை, தலைவர், உலகம் |

| | | |
|---|---|---|
| 6 | பொருத்துக | |
| | 1 | யாப்பின் உறுப்புகள் ... அ) நான்கு |
| | 2 | அசை ... ஆ) ஏழு |
| | 3 | பாவின் வகைகள் ... இ) இரண்டு |
| | 4 | தளை ... ஈ) ஆறு |
| | 1 | 1 ... அ, 2 ... ஈ, 3 ... ஆ, 4 ... இ |
| *** | 2 | 1 ... ஈ, 2 ... இ, 3 ... அ, 4 ... ஆ |
| | 3 | 1 ... ஈ, 2 ... ஆ, 3 ... அ, 4 ... இ |
| | 4 | 1 ... ஆ, 2 ... ஈ, 3 ... இ, 4 ... அ |

| | | |
|---|---|---|
| 7 | இரண்டு அடிகளைப் பெற்று வருவது | |
| | 1 | கலிவெண்பா |
| | 2 | ஆசிரியப்பா |
| *** | 3 | குறள் வெண்பா |
| | 4 | நேரிசை வெண்பா |

| | | |
|---|---|---|
| 8 | பொருள் என்னும் ஈற்றுச் சீரின் வாய்பாடு | |
| *** | 1 | மலர் |
| | 2 | பிறப்பு |
| | 3 | நாள் |
| | 4 | காசு |

| | | |
|---|---|---|
| 9 | மரபுத்தொடருக்கான பொருளைப் பொருத்துக | |
| | 1 | கயிறு திரித்தல் ... அ) அதிகமாகப் பேசுதல் |
| | 2 | கொட்டி அளத்தல் ... ஆ) சொல்லாமல் செல்லுதல் |
| | 3 | முதலைக் கண்ணீர் ... இ) பொய் கூறுதல் |
| | 4 | கம்பி நீட்டுதல் ... ஈ) பொய்யழுகை |
| | 1 | 1 ... ஈ, 2 ... ஆ, 3 ... இ, 4 ... அ |
| *** | 2 | 1 ... இ, 2 ... அ, 3 ... ஈ, 4 ... ஆ |
| | 3 | 1 ... அ, 2 ... இ, 3 ... ஆ, 4 ... ஈ |
| | 4 | 1 ... ஈ, 2 ... ஆ, 3 ... அ, 4 ... இ |

www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

| | | |
|---|---|---|
| 10 | ‘ஆறு’ என்னும் சொல் தரும் வெவ்வேறு பொருளைக்கொண்டு உருவாக்கிய பொருத்தமான தொடரை அறிக | |
| | 1 | கடற்கரையோரம் நடப்பட்ட ஆறு மரக்கன்றுகளும் வளர்ந்து மிகப்பெரிய மரங்களானதைக் கண்ட முதியவர் மகிழ்ந்தார். |
| | 2 | ஆறு கரைபுரண்டு ஓடியதில் பல மரங்கள் அடித்து செல்லப்பட்டது. |
| | 3 | தந்தைக்கு நண்பகல் உணவை ஆற்றைக் கடந்து கொண்டு செல் என்று அன்னை கூறினார். |
| *** | 4 | நதிவழியே சென்று அறுவரைக் கண்டு அவர்களது துன்பத்தைத் தணித்து வருவாயாக என்று குரு கூறினார். |

www.Padasalai.Net

# தமிழ் – வகுப்பு 10 – மதிப்பீடு

## இயல் – 9

| | | |
|---|---|---|
| 1 | கலையும் அதன் பொருளும் பற்றி ஜெயகாந்தன் கூறுவது | |
| | 1 | அழகியலோடும் பொருள் நிறைந்த படைப்பாகவும் இருத்தல் வேண்டும் |
| *** | 2 | கலை, கலைத்தன்மையோடும் அதன் பொருள் சமூகப் பார்வையோடும் இருக்க வேண்டும் |
| | 3 | இலக்கண வளத்தோடு கலைப்படைப்பு அமைதல் வேண்டும் |
| | 4 | கலைத்தன்மையோடும் கட்டமைப்புகளோடும் அமைதல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| 2 | பொருத்துக. | |
| | 1 | சில நேரங்களில் சில மனிதர்கள் – அ) திரைப்படமான புதினம் |
| | 2 | எதற்காக எழுதுகிறேன்? – ஆ) சிறுகதை |
| | 3 | தர்க்கத்திற்கு அப்பால் – இ) சாகித்திய அகாதெமி விருது |
| | 4 | யாருக்காக அழுதான்? – ஈ) கட்டுரைத் தொகுப்பு |
| | 1 | 1 – அ, 2 – ஈ, 3 – ஆ, 4 – இ |
| *** | 2 | 1 – இ, 2 – ஈ, 3 – ஆ, 4 – அ |
| | 3 | 1 – ஈ, 2 – ஆ, 3 – அ, 4 – இ |
| | 4 | 1 – இ, 2 – அ, 3 – ஈ, 4 – ஆ |

| | | |
|---|---|---|
| 3 | நாகூர் ரூமி எழுதத் தொடங்கிய இதழ் | |
| | 1 | ஆனந்த விகடன் |
| | 2 | இந்தியா |
| | 3 | குடியரசு |
| *** | 4 | கணையாழி |



www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 4 | கருணையன் மார்பில் அணிந்த அணிகலனாக உவமிக்கப்படுவது | |
| | 1 | நெல்மணிகளைக் கோவையாக கொண்ட மாலை |
| *** | 2 | அறங்களைக் கோவையாக இணைத்த தவமணிமாலை |
| | 3 | அன்னையின் அன்பான வழிகாட்டலில் இணைத்த தவமாலை |
| | 4 | மலர்களையும் கண்ணீரையும் கொண்ட அன்பு மாலை |

| | | |
|---|---|---|
| 5 | "விரிந்தன கொம்பில் <u>கொய்த வீ</u> யென உள்ளம் வாட" - அடிக்கோடிட்ட தொடரின் பொருள் | |
| *** | 1 | பறித்த மலர் |
| | 2 | வீழ்ந்த மலர் |
| | 3 | உதிர்ந்த மலர் |
| | 4 | மணம்வீசும் மலர் |

| | | |
|---|---|---|
| 6 | வீரமாமுனிவர் இயற்றிய சிற்றிலக்கியங்களுள் ஒன்று | |
| | 1 | தொன்னூல் விளக்கம் |
| | 2 | சதுரகராதி |
| *** | 3 | கித்தேரி அம்மாள் அம்மானை |
| | 4 | பரமார்த்த குரு கதைகள் |

| | | |
|---|---|---|
| 7 | 'தீவகம்' என்னும் சொல்லின் பொருள் | |
| | 1 | நெருப்பு |
| | 2 | தீவுத்திடல் |
| *** | 3 | விளக்கு |
| | 4 | தீவுப்பகுதி |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 8 | "எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ் சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்" – என்று கூறும் நூல் | |
| | 1 | நன்னூல் |
| *** | 2 | தண்டியலங்காரம் |
| | 3 | தொல்காப்பியம் |
| | 4 | மாறனலங்காரம் |

| | | |
|---|---|---|
| 9 | பொருத்துக | |
| | 1 | தீவக அணி – அ) உள்ளதை உள்ளவாறு கூறுவது |
| | 2 | தற்குறிப்பேற்ற அணி – ஆ) சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி பொருள்கொள்வது |
| | 3 | நிரல் நிறையணி – இ) பாடலின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அப்பாடலின் பல இடங்களில் உள்ள சொற்களோடு பொருந்துவது |
| | 4 | தன்மையணி – ஈ) இயல்பாக நிகழ்வதில் தன் கருத்தை ஏற்றிக் கூறுவது |
| *** | 1 | 1 – இ, 2 – ஈ, 3 – ஆ, 4 – அ |
| | 2 | 1 – ஈ, 2 – இ, 3 – அ, 4 – ஆ |
| | 3 | 1 – ஆ, 2 – அ, 3 – ஈ, 4 – இ |
| | 4 | 1 – இ, 2 – ஆ, 3 – அ, 4 – ஈ |

| | | |
|---|---|---|
| 10 | தற்குறிப்பேற்றம் – பிரித்து எழுதுக | |
| *** | 1 | தன் + குறிப்பு + ஏற்றம் |
| | 2 | தன் + குறிப்பு + யேற்றம் |
| | 3 | தங் + குறிப்பு + ஏற்றம் |
| | 4 | தன் + குறிப் + ஏற்றம் |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 11 | நீண்ட நாள் கழித்து வீட்டிற்கு வந்த மாமாவைக் கண்ட வளவன், . . . . . . . . . . . . . . மாமா வந்திருக்கிறாரே என்று வியந்தான். | |
| | 1 | நீர் மேல் எழுத்து போல |
| | 2 | வாழையடி வாழையாய் |
| *** | 3 | அத்திப்பூத்தாற் போல் |
| | 4 | தாமரை இலை நீர் போல |

| | | |
|---|---|---|
| 12 | திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்ட தொடரைத் தேர்க | |
| | 1 | திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று 'அறுதியிட்டுக்' கூறுகிறார்! |
| *** | 2 | திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார். |
| | 3 | திருவள்ளுவர், "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று அறுதியிட்டுக் கூறுகிறார்! |
| | 4 | 'திருவள்ளுவர்', 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார். |

www.Padasalai.Net